**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No.76/2012**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW-1 |
| Name | : S. Sargunam |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.11.2019.

**முதல் விசாரணை.**

நான் தற்போது மோட்டார் சைக்கிள் ஏஜன்சி எடுத்து நடத்தி வருகிறேன். எங்கள் நிறுவனத்தின் பெயர் சுசி ஸ்கூட்டர் சென்டர், காஞ்சிபுரம் என்பதாகும். அந்நிறுவனத்தின் நான் மேனேஜிங் டைரக்டராக உள்ளேன். செங்கல்பட்டிலும் அதன் கிளையில் ஜெயபிரகாஷ் என்பவருக்கு முழு பொறுப்பு கொடுத்துயிருந்தோம். அவரின் நடவடிக்கையில் சந்தேகம் வரவே திடீரென 6.10.2008 ம் தேதி சோதனை மேற்கொண்டோம். அவ்வாறு சோதனை செய்த போது 18 இரு சக்கர வாகனங்கள் இருக்கவேண்டியது 14 இரு சக்கர வாகனம் மட்டும் இருந்தன. நாங்கள் அந்த நான்கு வண்டிகள் பற்றி விவரம் கேட்டபோது மேற்படி ஜெயப்பிரகாஷ் சரியான பதில்கள் சொல்லவில்லை. பின்னர் வெளியில் கொடுத்துள்ளதாகவும், வந்து தருவதாகவும் சமாளித்து பதில் சொன்னார். நாங்கள் மறுநாள் வந்து மீண்டும் ஆவணங்களை பார்த்து கேட்டபோது அவர் தான் வண்டியை சேல்ஸ் செய்து விட்டதாகவும், பணம் அதற்கு வாங்கி விட்டதாகவும் அதனை திரும்ப தருவதாகவும் கூறினார். நாங்கள் திரும்ப திரும்ப கேட்ட போது அவர் சுமார் 44,000/- ரூபாய் ஒரு வண்டிக்கான தொகையை மூன்று நாளில் கொடுத்தார். நாங்கள் மீண்டும் மீண்டும் போஸ பண்ணி கேட்கவே அவர் ஒரு பத்திரம் தருவதாகவும் அதை விற்று பணத்தை எடுத்துக்கொள்ளுமாறு சொன்னார். அந்த பத்திரம் அவர் பெயரில் இல்லை. அதை சுட்டிக்காட்டி கேட்டபோது மீண்டும் கால அவகாசம் வேண்டினார். அவர் யார்

**யாருக்கு விற்பனை செய்தார் என்ற விவரத்தை கூட கூறவில்லை. அவர் அப்போது சுமார் 6 மாதம் காலம் வேலை பார்த்துயிருந்தார். அவரை நான் தான் பணி அமர்த்தினேன். இவ்வாறு அவர் கால அவகாசம் கேட்டு நாட்கள் நீடிக்கவே 21.12.2010 ம் தேதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் தட்டச்சு கொடுக்கப்பட்டது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது அதசாஆ 1 ஆகும். இது குறித்து போலீஸ் என்னை விசாரணை செய்தார்கள்.**

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>

**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை இல்லாமல் சாட்சியம் முடிக்கப்பட்டது.**

**மறு விசாரணை.** இல்லை.